மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சாத்தூர்

அ.வ.எண். 9/2023

பெயர் – பால்சாமி (வா.சா.1)

நாள் – 08.11.2023

பிரதிவாதி தரப்பில் செய்யப்பட்ட கு.வி.

எனக்கு 2 மகள் மற்றும் ஒரு மகன் உள்ளார்கள் என்றால் சரிதான். எனது மகன் திருப்பூரில் வேலை செய்து வருகிறார் என்றால் சரிதான். நான் என்ன தொழில் செய்கிறேன் என்றால் விவசாயம் செய்கிறேன். தற்போதும் விவசாயம் பார்க்கிறேன். விவசாயம் நானே வேலை செய்கிறேனா, அல்லது ஆட்கள் வைத்து வேலை செய்கிறேனா என்றால் ஆட்களை வைத்து வேலை பார்ப்பேன். அப்போது நான் உடன் இருப்பேன். நான் வட்டி தொழில் எத்தனை ஆண்டுகாலமாக செய்துவருகிறேன் என்றால் நான் வட்டி தொழில் எதுவும் செய்து வரவில்லை. எங்கள் ஊரில் நான் யாருக்காவது வட்டிக்கு பணம் கொடுத்துள்ளேனா என்றால் அவசர தேவைக்கு பணம் கொடுத்துள்ளேன். அவ்வாறு என்னிடம் பணம் வாங்கியவர் மீது வழக்கு தாக்கல் செய்துள்ளேனா என்றால் வழக்கு தாக்கல் செய்துள்ளேன். அதற்காக அ.வ.எண்.95/2020 வழக்கை மாண்பமை சார்பு நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருந்தேன் என்றால் சரிதான். அந்த வழக்கு தற்போது நிலுவையில் இருந்து வருகிறது என்றால் சரிதான். பிரதிவாதிக்கு கொடுத்ததாக சொல்லும் பணத்தை நான் வீட்டில் வைத்திருந்தேனா என்றால் வீட்டில் தான் வைத்திருந்தேன். எனக்கு வங்கி கணக்கு உள்ளதா என்றால் உள்ளது. பிரதிவாதிக்கு நான் எங்கு வைத்து பணம் கொடுத்தேன் என்றால் வீட்டில் வைத்து பணம் கொடுத்தேன். அவ்வாறு நான் பணம் கொடுத்தபோது யார் யார் எல்லாம் இருந்தோம் என்றால் நான், எனது மனைவி மற்றும் பன்னீர்செல்வத்தின் மகன் ஜேக்கப் ஆகியோர்கள் இருந்தோம். புரோநோட்டில் யாரெல்லாம் கையொப்பம் செய்துள்ளார்கள் என்றால் ஜேக்கப் புரோநோட்டை எழுதினார். அதில் அந்நேரம் என்னை வீட்டிற்கு தேடிவந்த நாகராஜ் வாத்தியார் சாட்சி கையொப்பம் செய்தார். புரோநோட்டில் எனது மனைவி சாட்சி கையொப்பம் செய்தாரா என்றால் இல்லை. பிரதிவாதி எனக்கு 15 வருட பழக்கம் என்று சொல்லியுள்ள நிலையிலும் அவர் உள்ளூர்காரர் என்று சொல்லியுள்ள நிலையில் பிரதிவாதி என்னிடம் பணம் பெற்ற விவரத்தை அவரது வீட்டிற்கு தெரிவித்தேனா என்றால்

தெரிவிக்கவில்லை. பிரதிவாதி என்னிடம் பணம் வாங்கியதாக சொல்லும் தேதியில் இருந்து இன்றுவரை நான் பிரதிவாதி என்னிடம் பணம் பெற்ற விவரத்தை சொல்லவில்லை என்றாலும் வட்டி கேட்டு அவரது வீட்டிற்கு நான் செல்லவில்லை என்றாலும் சரிதான். பிரதிவாதிக்கு 3 மகன்கள் என்றால் சரிதான். அதில் இருவர் வெளிநாட்டில் வேலை செய்கிறார்கள் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. பிரதிவாதியின் மகன்கள் எங்கு வேலை செய்கிறார்கள் என்ற விவரம் எனக்கு தற்போது வரை தெரியாது என்றால் சரிதான். பிரதிவாதியின் மகன்கள் இருவரும் வெளிநாட்டில் வேலை பார்க்கும் விவரத்தை நான் நன்கு தெரிந்துகொண்டே இந்த வழக்கிற்காக அவர்கள் வெளிநாட்டில் வேலை பார்த்த விவரம் தெரியாது என பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. பிரதிவாதி அவரது மகன்கள் வசதியாக உள்ள காரணத்தினால் அவர்களிடம் இருந்து பணம் பறிக்க வேண்டும் என்பதற்காக பொய்யாக தாவா புரோநோட்டை உற்பத்தி செய்துள்ளேன் என்றால் சரியல்ல. பொதுவாக வட்டிக்கு வாங்கியவர் மாதா மாதம் வட்டி செலுத்தாவிட்டால் அவரது வீட்டிற்கு சென்று வட்டி கேட்பது வழக்கம் என்றால் அது பழக்கத்தை பொறுத்தது ஆகும். நான் உண்மையிலேயே பிரதிவாதிக்கு பணம் கொடுக்காத காரணத்தினால் தான் பிரதிவாதியின் வீட்டிற்கு சென்று அசல் மற்றும் வட்டி தொகையை கேட்கவில்லை என்றாலும் உண்மையிலேயே பணம் கொடுத்திருந்தால் பிரதிவாதியின் வீட்டிற்கு சென்று அசல் மற்றும் வட்டி தொகைக்கான பணத்தை கேட்டு இருப்பேன் என்றாலும் சரியல்ல. பிரதிவாதி என்னை தரக்குறைவாகவும், அவமரியாதையாகவும் பேசியதாக சொல்லியுள்ள நிலையில் நான் காவல் நிலையத்தில் அதுசம்பந்தமாக புகார் கொடுத்துள்ளேனா என்றால் இல்லை. பிரதிவாதி என்னை தரக்குறைவாகவும், அவமரியாதையாகவும் பேசவில்லை என்றாலும் வழக்கிற்காக நான் பிரதிவாதி என்னை தரக்குறைவாக பேசியதாக பொய்யாக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. என்னை எங்கு வைத்து தரக்குறைவாக பேசினார் என்றால் நான் வட்டி ரூபாயை பிரதிவாதியின் வீட்டின் அருகே சென்றபோது அவர் தரக்குறைவாக பேசவந்தார். நான் வந்துவிட்டேன். எனது நிரூபண வாக்குமூலத்தில் 20 மாதங்களாக பிரதிவாதி செலுத்தவில்லை என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். தாவா புரோநோட்டு என்னால் உருவாக்கப்பட்டது என்றால் சரியல்ல. பிரதிவாதி எனக்கு எக்காலத்திலும் பணம்

கொடுக்கவேண்டியதில்லை என்றால் சரியல்ல. பிரதிவாதியிடம் இருந்து பணம் பறிக்க வேண்டும் என்ற நோக்கத்தோடு இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை – இல்லை.